REGD. No. M. 6311

'PHONE No. 55630

தனி இதழ்
ஒரு அணா
இலங்கையில் 10 சதம்

மலர் 1] [இதழ் 169

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

சந்தா விபரம்
உள்நாடு (இலங்கை உட்பட)
ஆண்டு ரூ. 24—0—0
6 மாதம் ரூ. 12—0—0
3 மாதம் ரூ. 6—0—0
வெளிநாடு:
ஆண்டு ரூ. 30—0—0
6 மாதம் ரூ. 15—0—0
3 மாதம் ரூ. 7—8—0

"THE NAM NADU" A TAMIL DAILY : THE OFFICIAL ORGAN OF: THE D.P.F

சென்னை: மார்கழி 13உ திங்கள் (28—12—53) ★ ★ ★ வெளியூர்: மார்கழி 14உ செவ்வாய் (29—12—53)

'நமக்குப் பகை பார்ப்பனீயம்தான்!'

'பார்ப்பன மக்கள் தி. மு. கழகத்தின் லட்சியங்களைப் புரிந்துகொள்ளவில்லை'

'புதுக்கிராம சம்பவத்திற்கும் நமது கழகத்துக்கும் சிறு தொடர்பும் கிடையாது'

பாராட்டு விழாவில் மதியழகன் அறிவுரை

சென்னை, டிச. 28—

"இந்நாட்டுக் காவிரியையும், பாலாற்றையும், மைசூரையும், திருவாங்கூரையும் இணைத்துத்தான ஒரு பெரும் அரசியலை அமைக்கப் போகிறோம். விடுதலை வாலிபப் பட்டாளம் அதற்கென வேக வேகமாக வளர்ந்து வருகிறது!"

"இந்த இடத்தையும், இவ்வளவு மாபெரும் கூட்டத்தையும் பார்க்கும்போது, என் எண்ணமெல்லாம் ஐந்தாண்டுகட்கு முன்னே செல்கிறது. இங்கேதான் இந்தி எதிர்ப்புப் படை திரட்டினோம்! அதனை விரட்டியடித்து இங்கேதான் வெற்றியும் கொண்டாடினோம்.

"இந்த நேரத்திலே நமது வளர்ச்சியைக் கண்டு மாற்றார் வசை பாட ஆரம்பித்துள்ளனர்.—'இவர்கள் துவேஷிகள்; பார்ப்பனத் துவேஷிகள்,' என்று! நாம் பல ஆண்டுகளாக, ஆயிரமாயிரம் மேடைகளிலே திட்ட வட்டமாகச் சொல்லியிருக்கிறோம்—நமக்கும், பார்ப்பனருக்கும் தனிப்பட்ட பகை கிடையாது; நமக்குப் பகை 'பார்ப்பனீயம்'தான் என்று! உயர்ந்தவன்—தாழ்ந்தவன் என்ற உலுத்தக் கொள்கையை ஒழிக்க முன்வாருங்கள் என்று!"

"ஆச்சாரியார் பாஷைப்படி சொல்ல வேண்டுமானால் 'துரதிருஷ்டவசமாக' பார்ப்பனர்கள், இன்னும் நமது தி. மு. கழகத்தின் இலட்சியங்களைச் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை. தூத்துக்குடி நிதிக்காக (பார்ப்பன) தோழர் எஸ். வி. சகஸ்ரநாமம் நாடகம் ஆடித் தந்தாரே! எங்களுக்கும், பார்ப்பனருக்கும் தனிப்பட்ட பகையென்றால் இதற்குப் பொருளென்ன?

"புதுக்கிராமச் சம்பவத்திற்கும், திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் நிச்சயம் தொடர்பு இல்லையென்றே கூறுவேன்; பார்ப்பனர்களைத் தாக்க எண்ணமிருந்திருந்தால், இந்த நேரத்திலல்ல—பொன்னான வேறு வாய்ப்பு எங்களுக்கு ஒருபோது இருந்தது; அந்த வாய்ப்பை உபயோகப்படுத்தி இருக்கலாம்—ஆனால், அதை நாங்கள் உபயோகப்படுத்தவில்லை!

"சென்னை கடற்கரையில் ஐவரை 2 லட்சம் பேர் வரவேற்றனர் என்ற செய்தி 'இந்து' பத்திரிகையில் இருட்டடிப்பு செய்யப்பட்டது; பார்ப்பனப் பத்திரிகைகள் சில திரித்து எழுதின இது தெரியவில்லையா, துரோகமாக—துவேஷமாக ஆச்சாரியாருக்கு?'

—இவ்வாறு, சென்னை, பெத்துநாய்க்கன் பேட்டை, 8-வது வட்ட தி. மு. கழகச் சார்பில் தலைவர்களுக்கு நடைபெற்ற வரவேற்புக் கூட்டத்தில், தோழர் மதியழகன் பேசுகையில் கூறினார்.

தொடர்ந்து அவர் பேசியதாவது;

"சுயமரியாதை இயக்கத்தின் தொட்டில் என்று கருதப்படுவது இப்பதப் பெத்துநாய்க்கன் பேட்டைதான்; அண்ணா அவர்கள் பலநாள் உலவிய வட்டாரம் இது; வளர்ந்ததும் கூட; நண்பர் நடராசன் அவர்களைத் தந்து, இன்றளவும் பெற்றுள்ளதுமாகும். கடல் போல் நீங்கள் இங்கு கூடி எங்களை வரவேற்றமைக்காக உண்மையிலேயே, நாங்கள் உங்களுக்கு என்றும் நன்றியுடையவர்கள் ஆவோம்."

"இவ்வளவு இலட்சக்கணக்கான மக்களைப் பார்க்கும்போது, அண்ணாவை மக்கள் நம்பியிருக்கிறார்கள் — திராவிட முன்னேற்றக் கழகத்தின் திட்டங்களை பொது மக்கள் எதிர்நோக்கியிருக்கிறார்கள் என்பது புலனாகிறது. இங்கு மட்டுமல்ல—நான் பிறந்த சிற்றூரான கணியூர் போன்ற இடங்களிலே கூட, மக்கள் அரசியல் விழிப்புணர்ச்சி பெற்று, நம்மை ஆவலோடு எதிர்பார்க்கின்றனர்."

"ஒருநாள் இண்டர் வகுப்பிலே, ஒரு பார்ப்பன வக்கிலும், ஒரு திராவிடரும் பிரயாணம் செய்தனராம். திடீரென்று அந்தத் திராவிடர், தன் கோட்டைக் கழற்றி வைத்துவிட்டு, முகம் அலம்ப 'உள்ளே' போனாராம்! போனவுடன் பக்கத்திலிருந்த பார்ப்பன வக்கீல், அந்தக் கோட்டுக்குள் கையைவிட்டு, ஒரு நூறு ரூபாய் நோட்டைத் திருடி, தன் டைரி'யிலே வைத்துக் கொண்டாராம்! உள்ளே இருந்துவந்த அந்தத் திராவிடர், தன் பையிலே பணம் காணாமல்போகவே, திகைத்தாராம்! உடனே பார்ப்பன வக்கீல் கேட்டாராம். 'என்னடாபா, பரபரப்புடன் தேடுகிறாய்?' என்று!

(4-ம் பக்கம் பார்க்க)

தோழர்கட்கு!

டிசம்பர் 26-ந் தேதி, சென்னை, பெத்துநாய்க்கன்பேட்டை வரவேற்புக் கூட்டத்தில், பொதுச் செயலாளர் தோழர் அண்ணாதுரை, தோழர் நெடுஞ்செழியன் ஆற்றிய சொற்பொழிவுகளும், டிசம்பர் 27-ந் தேதியன்று, சென்னை, இராயப்பேட்டை வரவேற்புக் கூட்டத்தில் தோழர்கள் மு. கருணாநிதி கண்ணதாசன் ஆற்றிய சொற்பொழிவுகளும், நிகழ்ச்சிகளும் தொடர்ந்து வெளிவரும்.

'நாட்டுக்காகத்தான் கவர்னர் - கவர்னருக்காக மக்கள் அல்ல'

'அடுத்த சட்டசபையில் - சி. ஆர். இருப்பாரோ இல்லையோ!'

'கடைசியாக அவருக்கு என் வாழ்த்துகளைத் தெரிவிக்க முயன்றேன்'

வ. கோவிந்தசாமி எம்.எல்.ஏ. விளக்கம்

சென்னை, டிச. 26—

"இன்று, இந்தக் கூட்டத்திற்கு, சற்றுத் தாமதமாக வந்திருக்கிறேன். சட்ட சபையில், இன்று, ஆச்சாரியாருக்குக் கடைசி முறையாக என் வாழ்த்துதலைத் தெரிவித்துவிட முயன்றேன்; —காரணம், அடுத்த சட்டசபை கூடும்போது, ஆச்சாரியார் இருப்பாரோ இருக்கமாட்டாரோ என்ற சூழ்நிலை பெருகி வருவதால்!"

"'கவர்னரை – கோவிந்தசாமி கண்டித்துப் பேசினார்,' என்று' பத்திரிகைகளில் செய்திகள் வந்தன; நான், கட்சி மனப்பான்மையுடன் பார்த்து, கவர்னரைக் கண்டித்துப்பேசினேன் என்பது தவறு. போலீசாரின் தடியைப் பிடுங்கி, பொதுமக்களை அடித்தாரே கவர்னர்— இதுதான் முறையா? ஜனநாயகமா?'—என்றுதான் கேட்டேன். 'நாட்டுக்காகத்

(4-ம் பக்கம் பார்க்க)

திராவிடநாடு சார்பில் ஒருவர் ஐ.நா.வில் பங்கு கொள்ளும் பேறு வேண்டும்

—(:)—

தி. மு. கழகம் வெறும் கட்சியல்ல! விழிச்சியுற்ற மக்கள் இயக்கமாகும்!

என். வி. நடராசன் அறைகூவல்

சென்னை, டிச. 28—

"தென்னாட்டை எவனோ ஒருவன் ஆள்கிறான் என்ற கொடுமை தொலைந்து, தென்னாட்டை, திராவிடன் ஆள்கிறான் என்ற நிலைமையும், அதன் சார்பில் ஐ. நா.-விலே ஒருவன் அங்கம் வகிக்கிறான் என்ற நிலைமையும் வரவேண்டும்; இதற்காகத்தான் தி. மு. கழகம் பாடுபடுகிறது. தி. மு. கழகம் ஒரு கட்சி மட்டுமல்ல அது ஒரு மாபெரும் ஜனநாயக இயக்கம். அதிலே தொழிலாளருக்கும் இடமுண்டு—ஏழைக்கும் இடமுண்டு."

"நாம் நடத்திய போராட்டங்கள் ஆச்சாரியாருக்கு நல்ல பாடம் கற்பித்திருக்கிறது. வடநாட்டு ஆட்சி, டில்லியின் ஆதிக்கம். இனி தென்னாட்டிலே செல்லுபடியாகாது என்பதை நன்கு உணர்த்தியிருக்கிறது. வடநாட்டு ஏகாதிபத்தியம் இனி அதிக நாளைக்கு நீடிக்கும் என்று நினைத்தால், நிச்சயம் அவர்களின் ஆசை தூள் தூளாகும் என்பது உறுதி. ஆச்சாரியார் நினைத்தார்—டில்லி சர்க்கார் நேருவின் ஆசி பெற்றுவிட்டால தென்னாடு திரும்பி அலைத்தாவது பதவி பீடத்திலே அமர்ந்துவிடலாம் என்று. முடிந்ததா? என்ன ஆயிற்று? யார் இதற்குக் காரணம்? தி. மு. கழகத்தின் தொண்டு, எதுவும் வீண் போகாது." என்று சைதாப்பேட்டை ... கன்பேட்டை வரவேற்புக்கூட்டத்தில் தோழர் என். வி. நடராசன் குறிப்பிட்டார்.

தொடர்ந்து அவர் பேசினார்:—

"தோழர் கோவிந்தசாமி அவர்கள் ஆச்சாரியாரின் கல்வித் திட்டத் தோல்வி பற்றி கூறியது கேட்டு உள்ளபடியே மகிழ்கிறோம். ஆச்சாரியார் தன் தவறை உணர்ந்து, உத்தியோக பூர்வமாக தன் திட்டத்தை வாபஸ் வாங்குவார் என எதிர்பார்க்கிறோம். 'நாங்கள் எதையும் எதிர்ப்பவர்கள் —'எங்களுடைய போராட்டங்கள், காங்கிரசுக்கு எதிராக எதற்கும் நடத்தப்படுவது,' என்ற தவறான எண்ணம் மாற்றப்பட வேண்டும்.

"அரசியலிலே ஒரு தனி மனிதனுக்கும் அதனால் பலன் உண்டென்றால், நாட்டு மக்களின் நெஞ்சுக்கு அது நல்லது என்று பட்டால், நிச்சயம் அதை நாங்கள் ஆதரிக்கத் தவறியதில்லை. ஆனால், ஆச்சாரியாருடைய திட்டம் ஆரம்பத்தில் தொல்லை தருவதாக இருந்தது. இன்று வாபஸ் வாங்குற' நிலைமையிலே இருக்கிறார்! இது அவருக்கும் புதிது, நமக்கும் பழக்கம்.

"1938-ல இந்தியை எதிர்த்

(4-ம் பக்கம் பார்க்க)

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை 28—12—1953 திங்கள்

ரூ. 10,000

தூத்துக்குடி சதிவழக்கு—நமது தி. மு. கழகத்துக்கு அமைச்சர் ஆச்சாரியார் அனுப்பிய அறைகூவல். பலமான கடைக்கால் போட்டுக்கொண்டுதான், அந்த வழக்கை நமது கழகத் தோழர்கள் மீது பலவந்தமாகத் திணித்தார். தமது கையில் வலிய சிக்கிய அதிகாரத்தைக் கொண்டு, அது தம்மை விட்டுக் கைமாறுவதற்குள்ளாக, நமது கழகத்தைத் தரைமட்டமாக்கிவிட வேண்டும் என்ற நினைப்பிலேதான் அறநெறியினின்று நீங்கி, தமது யானைப் பசியைத் தணித்துக்கொள்ள நமது கழகத்தின் மீது வழக்குத் தொடுத்தார். வாழ்க்கையே நீர்மேற் குமிழி என்று ஊருக்கு உபதேசம் செய்து வருகிற அந்தக் கபட நாடக சூத்திரதாரி, தமது பிடியில் சிக்கிய அதிகாரத்தை சிரஞ்சீவி என்று நம்பிவிட்டார்.

அந்த ஆணவக்காரர் அறியார், நமது தி. மு. கழகத்தின் ஊற்றுக்கால், இலட்சக்கணக்கான திராவிடப் பெருங்குடி மக்களின் இதயத்தை இருப்பிடமாகக் கொண்டிருக்கிறதென்பதை. தி. மு. கழகம் கண்ணியம்—கட்டுப்பாடு—அமைதி—என்ற மும்மணிகளைத் தம் உயிரினும் உயர்வாக ஓம்பி வருகிறது என்ற மகத்தான உண்மையை, அந்தக் கலிக்குரிய காலத்து மனிதரால் புரிந்துகொள்ள முடியவில்லை. அவருடைய அரசியல் விழி, காலத்தால் குருடாகி விட்டதாகும்—இல்லை, காமாலை நோயில் மூழ்கி விட்டதாகும். அவர், தமிழ்நாட்டு அரசியல் வளர்ச்சியை, காலமெனும் கண்ணாடி அணிந்து நோக்காமல், அந்த நாள் அனுபவம் என்னும் காமாலைக் கண் கொண்டு பார்க்கிறார். நமது உருவத்தின தூய்மையான தும்பை மலர் நிறத்தை, அவரைக் காண முடியாமல் தடுத்து விடுகிறது, அவருடைய முன்னாள் பயிற்சி எனும் காமாலைக் கண்!

அரசியல் கலையும், அதை நன்கு கற்ற அரசியல் கட்சிகளின் நிலையும், ஆச்சாரியாரின் அந்தக் கால அரசியல் அனுபவத்துக்கு அறவே அப்பாற்பட்டதாகும். அதிலும், நமது தி. மு. கழகத்தின் அரசியல் நடைமுறை குன்றின்மேல் ஏற்றிய அறிவொளியாகும். அவர் பெற்றுள்ள அரசியல் ஒளியோ, அடிவாரத்தில் அணைந்து கிடக்கும் அகல் விளக்குக்குச் சமம்!

அவர் பெற்றுள்ள அரசியல் அனுபவம், தேய்ந்த படிக்கட்டு—சாய்ந்த தராசு! இந்த இரண்டின் துணை கொண்டு நமது தி. மு. கழகத்தின் நிறையை எடை போடக் கிளம்பினார், அன்பர் ஆச்சாரியார்!

எனவே, நமது கழகத்தின் உண்மையான கனத்தையும் அவரால் கணிக்க முடியவில்லை; தமது தவறையும் அவரால் உணர்ந்து கொள்ள முடியவில்லை. 'ஆப்பதனை அசைத்து விட்ட குரங்கது போல', அன்பர் ஆச்சாரியாரும் அவதிப் பட்டுக்கொண்டு இருக்கிறார்!

வெற்றி, அவரை 'எட்டி நில்', என்று அதட்டுகிறது! தோல்வி, அவரை அணைத்துக்கொள்ள, 'அருகில் வா', என்று அன்பழைப்பு விடுக்கிறது! அவரிடம மாட்டிக் கொண்டு கிடக்கிற அதிகாரம், அவரை, தோல்வியின் அருமையான அணைப்புக்குத் தாத்தி அடிக்கிறது!

அவர், நமது தலைவர்களைச் சிறையில் தள்ளிப் பூட்டும் போது, 'நம்மவர் சுகம் உறுதியாயிற்று—மறைவரின் திறன் சமாதியாயிற்று' என்றுதான் உள்ளம் பூரித்தார்; ஒப்பாரநடை பழகினார்—குழந்தையில்லாத இலலத்தில் கிழவன் கூத்தாடினது போலத்தான் இருந்தது, அவருடைய நடைகொடி டாவலைகள் அனைத்தும்! ஆனால், அவர், நடைமுறையில், ஆயிரமாயிரம் திராவிடர் ஓரே நாளில் சினந்து எழுந்து, தோளோடு தோள் சேர்த்து, உள்ளப் பூரிப்போடு, 'எம தலைவர் இருப்பிடந்தான், எமக்கு வாய்ந்த வளமார திராவிடம்' என்று, பலம் பொருந்திய உருக்கு இரும்பு சிறைக் கதவை, பலமாகத் தட்டுவதைத்தான் கண்டார்.

அரசியல் விழிப்பு அதிகம் ஏற்பட்டுள்ளதாகச் சொல்லப்படும் நகரங்களில் மட்டுமா, நாட்டு விடுதலைப் பண்பாடு, தலைவர்களைத் தேடி, சிறையை அடையும் திராவிட இன மக்களைக் கண்டார்? இல்லையே! சிற்றூர், பேரூர், பட்டி தொட்டிகளில் இருந்தெல்லாம் 'புலபுலெனக் கலகலெனப் புற்றீசல்போல்' கிளம்பி, ஆளவந்தாரின் அடக்குமுறையை எதிர்நோக்கி வருவதை அல்லவா, அவர் கண்டார்?

ஒருவேளை அறுசுவை உணவானாலும் ஐந்து காத தூரம் ஓட்டமும் நடையுமாகச் செல்லும் பார்ப்பனக் குடிப்பிறந்தவர் கூட்டம்போல், சாரை சாரையாக எறும்பு போலல்லவா திராவிடர் கூட்டம், தம் தாய்நாட்டு விடுதலைக்காக, இன்னல்பல ஏற்கத் துணிந்து அமைதியான அறப்போர்க்களம் அடைந்தது. துப்பாக்கியால் சுட்டால், 'திராவிடநாடு திராவிடருக்கே' என்று பிணமாகத் தரையில் சாயும்போது அமைதியாக இறுதிக் குரலெழுப்பிவிட்டல்லவா, தனது கடைசி மூச்சை விட்டான், களத்தில் பட்ட ஒவ்வொரு திராவிட வீரனும்? தடியடி கொடுக்கப்பட்டால், தம் தேகத்தில் இருந்து பீறிட்டுவரும் செங்குருதியையும் கருதிப் பார்க்காமல் 'வளமார் எமது திராவிடம் வாழ்க வாழ்கவே' என்றல்லவா பண்ணிசைத்தபடி மூர்ச்சையாகச் சாய்ந்தான்?

என்ன நினைப்பைக் கொடுத்திருக்கும் ஆச்சாரியாருக்கு, இந்தத் திராவிட அறப்போர் படையினரின் நெஞ்சுரம்? உயிரையும் திரணமாக மதித்து நடக்கும் மனவலம்? ஆச்சாரியார், மலைத்தே போனார்!

முறையை மாற்றிக்கொண்டார்—துப்பாக்கி, தடி, புதுப் புது வழக்குகளாக உருவெடுத்து விட்டன. அதில் ஒன்றுதான், தூத்துக்குடி சதி வழக்கு!

'இதுகள், பஞ்சைகள்; இதுகளுடன் ஒருகாலத்தில் இருந்தட்டை மூட்டைகளைத்தான் நாம களவாடிச் சென்றுவிட்டோமே; எதிர் வழக்காடுவதற்கு, இதுகள், பணத்திற்கு எங்கே போகும்?' என்று, இத்துறையிலும், நமது கழகத்தைக் குறித்து, முதியவர் ஆச்சாரியார் தப்புக் கணக்குப் போட்டுக் கொண்டார். அவருக்குத் தெரிந்துள்ளதெல்லாம், பஜாஜ் பணத்திலும், பிர்லா பணத்திலும் இயங்கிவந்த காங்கிரசின் வரலாறுதான்! எனவே, பொதுமக்களிடம், காலணா—அரையணாவாகப் பணம் பெற்று, பொதுமக்களுக்காக, பொதுமக்களால் இயங்கிவரும் பொதுமக்கள் இயக்கமான நமது திராவிட முன்னேற்றக் கழகத்தை, இயல்பாகவே சர்வாதிகார மனோபாவம் கொண்ட அமைச்சர் ஆச்சாரியாரால் அறிந்துகொள்ள முடியாது. இதில் ஆச்சரியமும் இல்லை. பொதுச்செயலாளரும், மற்ற தலைவர்களும் சிறையில் இருந்தபொழுது, தலைமை நிலையப் பொறுப்பாளர் நண்பர் கோவிந்தசாமி அவர்களால், தூத்துக்குடி சதிவழக்கில் எதிர் வழக்காடுவதற்காகக், குத்துமதிப்பாகக் குறிக்கப்பட்டத் தொகை ரூபாய் இருபதினாயிரம் ஆகும். நிதி தேவை என்று அவர் அறிக்கை வெளியிட்டு மூன்று திங்களுக்கு மேலாகிறது. இதற்குள் பொதுச் செயலாளரும் சிறை மீண்டார். அவரும் மனம் உடைந்து வேண்டுகோள் விடுத்தார்.

இத்துறையில், ரூபாய் பத்தாயிரத்தைத் தாண்டிவிட்டது, நிதி—இன்னும் பாதி இருக்கிறது, பூர்த்தியாக! முழுக் கிணற்றைத் தாண்ட முனைந்து, பாதிக் கிணற்றுக்கு நேராக வந்திருக்கிறோம். முழுக் கிணற்றையும் தாண்டியாக வேண்டும்—தாண்டியே தீரவேண்டும்—ஐயமில்லை, அதற்கு! நிதி சேர்ப்பதில் விசை வேண்டும். 'எப்படியும் சேர்ந்துவிடும்' என்று, தோழர்கள் தாமதம் காட்டக்கூடாது.

ஆச்சாரியாரின் அதிகார அந்தஸ்துக்கு ஆட்டம் கண்டு போய் இருக்கிறது இக்கூடி. இப்பவோ, பின்னையோ, இன்னும் சற்று நேரத்திலோ என்ற நிலை அவர் பதவிக்கு ஏற்பட்டு இருக்கிறது. ஆற்றில் சிக்கிய இலவம் பஞ்சு போல் இருக்கிறது அவருடைய அதிகாரம்!

எனவே, அதிகாரத்தை விட்டு அன்பர் ஆச்சாரியார் பிரிவதற்குள்ளாகவே, நமது தூத்துக்குடி நிதி முழுதும் சேர்ந்து, அவருடைய அரசியல் அதிகார ஆர்வத்தைக் குலைத்துவிட வேண்டும்! நம்மால் எதிர் வழக்காட முடியுமா என்று ஏளனமாக நினைத்தவர், நமது நிதி பூர்த்தியாகிவிட்டதைக் கண்டு அவர் மனம் உடைந்து வெட்கித் தலைகுனிய வேண்டும்!

அந்தக் காட்சியை நாம் கண்டு, அவர் முகத்துக்கு நேராக நமது கழகம் ஏளனப்பாட வேண்டும்! அந்த வாய்ப்பை, நமது கழகத்திற்கு உடனடியாகத் தேடிக் கொடுக்க வேண்டும் என்று சூளுரைத்துக் கொண்டு, நாம் ஒவ்வொருவரும் நிதி திரட்டுவதில் மேலும் கொஞ்சம் தீவிரம் காட்ட வேண்டும்.

நிதி தந்தவர்களையும், நிதி திரட்டியவர்களையும், கழகத்தின் களங்கத்தைத் துடைக்க உறுதி கொண்டுள்ளோர் அனைவரையும் நாம் பாராட்டுகிறோம். பத்தாயிரம்தான் சேர்ந்துள்ளது என்பதை நினைவுறுத்தி வாழ்த்துகிறோம்.

எல்லைப்புற காந்தி சகோதரர் விடுதலை பெறுவர்?

காராச்சி, டிச. 25—

எல்லைப்புற காந்தி என்று வழங்கப்பட்டவரும், காங்கிரஸ் முதல் வரிசைத் தலைவர்களில் ஒருவரும், பாகிஸ்தான் உருவானதிலிருந்து காவல் கைதியாக வைக்கப் பட்டிருப்பவருமான கான் அப்துல் கபார்கானும், அவருடைய இளைகூல் முன்னால் இணைந்த இந்தியாவில் எல்லைப்புற மாகில சர்க்கார் காங்கிரஸ் பிரதமராகவும் இருந்த டாக்டர் கான்சாகிபும், பாகிஸ்தான் சர்க்காரால் விடுவிக்கப்படுவர் என்று நம்பிக்கையான செய்தி ஒன்று கூறுகிறது.

செம்புடை சங்கத்தைச் சேர்ந்தவரும், எல்லை காந்தியின் மகனும், சென்ற திங்களில் காவல் கூடத்திலிருந்து விடுதலைப் பெற்றவருமான கான் அப்துல் அலிகானும், எல்லை காந்தியின் மருமகனான கான் முகமத் யாகானும், காராச்சியில் பாகிஸ்தான் சர்க்கார் அமைச்சர் குழுவினரை சந்தித்து, இரு சகோதரர்களையும் விடுதலை செய்யுமாறு வலியுறுத்தி வருகின்றனர்.

ஐந்தாண்டுத் திட்டத்தை நிறைவேற்ற உயர் அலுவலர்

(:)

ஆந்திர சர்க்காரின் நடவடிக்கை

கர்னூல், டிச. 24—

இங்கு கூடிய சர்க்கார் பலத் துறை அலுவலகத் தலைவர்கள் கூட்டத்தில், ஐந்தாண்டுத் திட்டத்தில், ஆந்திராவிற்கு உரித்தான திட்டங்களைத் தீவிரமாக நிறைவேற்றுவதற்காக ஒரு தனிப் பெரும் அலுவலரை நியமிப்பதென்று முடிவு கண்டனர்.

திட்டங்களை நிறைவேற்றுவதற்கு உரிமை கொண்டுள்ள பல சர்க்கார் துறைகளையும் ஒன்றுபடுத்தி கண்காணிப்பதே, அந்த உயர் அலுவலரின் பணியாகும்.

திட்டங்களை நிறைவேற்றுவதில் பொதுமக்களின் ஆர்வத்தைத் தூண்டுவதற்காக, மாவட்டங்கள் தோறும் சிறுசிறு திட்டக் குழுக்களை அமைப்பது என்றும் தீர்மானிக்கப்பட்டு இருக்கிறது.

விவசாயத்தில் முன்னேற்றமில்லையேல், இந்தியப் பொருளாதாரம் சீர்குலையும்!

விவசாயிகள் நலனுக்கும் வழிகோல வேண்டும்

லண்டன், டிச. 28—

"இந்தியாவின் இரு மகத்தான விவசாயப் பிரச்னைகள்—விவசாயிகளுக்குக் கடன் வசதி, தொழிலில் ஊக்கம்—இவ்விரண்டுமேதான்; இந்தியாவின் விவசாய நிலைமை அவ்வளவு திருப்திகரமாக இருக்கிறதென்று சொல்வதற்கில்லை; சிறு அளவில் சிதறிக் கிடக்கும் நிலங்கள், நிலத்தின் சொந்தக்காரர் எங்கேயோ நகரங்களில் இருப்பது, நுண்ணறிவு போதிய அளவில் இல்லாமல் இருப்பது விவசாயிகளிடையே சுகாதாரக் குறைவு இவைகள் எல்லாம் குறிப்பிடத்தக்க குறைபாடுகளாகும்."

"விவசாய அபிவிருத்தியின் நாட்டம் செலுத்தினால், இந்தியாவில், தானாகவே பொருளாதார அபிவிருத்தி ஏற்படும். விவசாயத்தில் எவ்வளவுதான் அபிவிருத்தி ஏற்பட்டாலும், போதிய ஊக்கமில்லாமல் இவைகளை அமுல் செய்ய முடியாது. இந்தியாவின் சோதனை, உலகிற்கே நன்மை ஏற்பட வழி செய்யும்."

—இவ்வாறு, இந்திய விவசாய மந்திரி குறிப்பிட்டு, சஞ்சிகை ஒன்றில் எழுதியுள்ள கட்டுரையில் கூறுகிறார்.

☆

கிராமவாசிகள் விருப்பம்

சென்னை, டிச. 28—

திட்டக் கமிஷன் நடத்திய 'சர்வே'யில், கிராமவாசிகள் குடிதண்ணீர் வசதிகளையே முதலில் செய்து தரவேண்டும் என விரும்புகின்றனர் என்று தெரிகிறது. மொத்தம் 8 361 திட்டங்களில், சுமார் 3,638 திட்டங்கள், குடிதண்ணீர்களுக்கான திட்டமேதான்!

அடுத்தபடியாக கிராமவாசிகள் விரும்புவது, ரஸ்தாக்கள்; மூன்றாவதாக விரும்புவது, பள்ளிக்கூடங்களும், ஆஸ்பத்திரிகளும், விவசாயம் சுகாதாரம் கான்காயது ஸ்தானத்தைப் பெறுகிறது.

☆

சமூக சேவையில் மாணவர்கள்

கிராமங்களில் சுமார் 4,310 மாணவர்கள், 29 முகாம்களாகப் பிரிந்து, சென்னை, பம்பாய், உத்தரப்பிரதேசம், பீகார் ஆகிய மாநிலங்களில், 450 நாட்கள் சமூகத்தொண்டு செய்துள்ளனர்.

ஏரி குளங்களில் அரு எடுத்தல், தரைகளைப் பலப்படுத்தல், கிணறு வெட்டுதல், எருக் குழிகளைத் தயாரித்தல், கச்சாரஸ்தாக்களை அமைத்தல், கிராமத்தைச் சுத்தம் செய்தல், முதியோர்களுக்குக் கல்வி கற்பித்தல் இவையாகும், இவர்கள் செய்த சேவை.

சென்னை மருத்துவக் கலாசாலையைச் சேர்ந்த மாணவர்கள், டாக்டர்கள் சென்னை நகரின் சுற்றுப்புறமுள்ள கிராமங்களுக்கு மாதம் இருமுறை சென்று வைத்திய உதவி செய்து வருகின்றனர்.

தை முதல் நாள்-தமிழர் திருநாள்

தூத்துக்குடி சதி வழக்கு நிதி வசூல்

★

முன் (23—1—53) தொடர்ச்சி ரூ	7912—1—6
பாழையங்கோட்டை கே. ஏ. சேகரன்	10—0—0
,, பி. மாதவன்	6—0—0
,, வி. எஸ். நடராசன்	5—0—0
,, அ. சுடலையாண்டி	5—0—0
,, எஸ். சேதுராமன்	5—0—0
,, அ. ராமசாமி	5—0—0
,, தி மு. அழகம்	3—0—0
,, கோ. கோவிந்தன்	3—0—0
,, எம். கங்காதரன்	3—0—0
,, எம். அருணாசலம்	3—0—0
,, என். வரதராசன்	3—0—0
,, ஆர். வேல்சாமி	3—0—0
,, எஸ். ராமையா	2—0—0
,, எஸ். பாண்டி	2—0—0
,, எம் ராமலிங்கம்	2—0—0
,, ஆர் சுப்ரமணியம்	2—0—0
,, எம். சு ரமணியம்	2—0—0
,, ச கதிர்வேல்	2—0—0
,, கு. அண்ணாமலை	2—0—0
,, சோ. சுந்தரராஜ்	2—0—0
,, லெ சிங்காரம்	2—0—0
,, எஸ். ராமசாமி	2—0—0
,, எம். அர்ச்சுனன்	2—0—0
,, எ. எம். சுப்ரமணியம்	2—0—0
,, எம். ராமசாமி	2—0—0
,, நெல்லியடி லட்சுமணன்	2—0—0
,, ,, பரமசிவம்	2—0—0
,, எஸ். சுப்பையா	2—0—0
,, எஸ். பி. கருப்பையா	2—0—0
,, ஒரு அனுதாபி	2—0—0
,, அ மாணிக்கம்	1—0—0
,, த. வேலழகன்	1—0—0
,, எம். கோபாலரத்தினம்	1—0—0
,, பெ. பெருமாள்	1—0—0
,, மு சின்னையா	1—0—0
,, கரு. விநாயகம்	1—0—0
,, எஸ். ஆர். ராசன்	1—0—0
,, வி. ரத்தினம்	1—0—0
,, எஸ் துரைசாமி	1—0—0
,, எஸ். ராமசாமி	1—0—0
சென்னை 3 அஞ்சல் பிரிப்பு அலுவலக ஊழியர்கள்.	50—0—0
மதுரையில் எம். ஜி. ராமச்சந்திரன் அவர்கள் குழுவினருடன் நடிக்கப்பட்ட 'இன்பக் கனவு' நாடகத்தில், தோழர் மு. கருணாநிதி அவர்களிடம் கொடுத்த தொகை	1000—0—0
,, மு. கருணாநிதி அவர்களிடம் ஒரு அன்பர் தனியாகக் கொடுத்தது.	5—0—0
தோழர் ஏ. கோவிந்தசாமி எம் எல் ஏ. அவர்கள் மூலம்:—	
விருத்தாசலம் பொதுக்கூட்ட உண்டியல் வசூல்	15—1—9
,, காரைக்கூடல்	1—9—3
சோழம்பட்டு ராமச்சந்திரன், அருணாசலம், ரேணு, குப்புசாமி, சின்னப்பா, செங்கல்வராயன், முனுசாமி, ஜெகதீசன்,	2—8—0
பண்ருட்டி கே. ஷெரிப்	1—0—0
,, ராமச்சந்திரன், கங்காதரன், முத்துகுமாரசாமி	1—8—0
தூத்துக்குடி பெரியசாமி	1—0—0
,, சு தர்மலிங்கம்	1—0—0
உறையூர் திருமதி ஜெயம்	1—0—0
,, ,, ராதா	1—0—0
,, ,, சீதா	1—0—0
,, ,, ரங்கநாயகி	1—0—0
,, ,, சரோஜா	1—0—0
,, ,, பங்கஜம்	1—0—0
,, ,, ஆர். கல்யாணம்	2—0—0
,, ,, சரோஜினி	1—0—0
,, எஸ் பி. ஆர்.	5—0—0
,, கோவிந்தன்	1—0—0
,, மாசி	1—0—0
,, ஆர். டி, சோமசுந்தரம் ஆகியோர்	1—8—0
18-ந் தேதி இதழில் திருச்சி 20-வது வட்டம் தோழர்கள், எம். முத்து, என். விட்டோபா ஆகியோர் தனித்தனியாக 1—0—0 என்று போட வேண்டியதை சேர்த்துப் போட்டு விட்டவகையில் விடுபட்டுப்போனது	1—0—0
வெஞ்சமடை ஆ காளிமுத்து	1—0—0
,, நா. துரை	1—0—0
,, கோ. பேரையன்	1—0—0

,, இரா. [illegible]பதி (புதுவை)	1—0—0
,, மரு. பழனியப்பன்	1—0—0
,, [illegible]	1—0—0
,, [illegible]சாமி	2—0—0
,, மு அருணாசலம்	1—0—0
,, [illegible]சாமி	1—0—0
,, இரா. [illegible]ணன்	1—0—0
,, [illegible]	1—0—0
,, கோ சீனிவாசு, சு நாட்டராயன்	1—0—0
உடுமலைப்பேட்டை உ வெ. சுந்தரம்	1—0—0
,, பி. வி. ஜார்ஜ்	1—0—0
,, பொன்னுச்சாமி	1—0—0
,, சி. டி. [illegible]	1—0—0
,, கோ [illegible], மு கந்தசாமி	1—0—0
[illegible] பிரதர்ஸ்	1—4—0
மதுரை [illegible] வி. டி. ராச மாணிக்கம்	5—0—0
சென்னை [illegible] அண்டு [illegible] கம்பெனி ஊழியர்கள் மூலம்:— பி. ஏ. அலாய்சியஸ், முருகேசன், பிரகாஷ்ராஜ் பி பராக்கிரமம், பி ஏ. குணசேகரன், ரவீந்திரன், எஸ். அண்ணாமலை, தே. வி. முனுசாமி, சீனிவாசன், செல்வராயம், சி. சபீந்திரன், [illegible] ராதன், வெங்கடேசன், [illegible]மூர்த்தி, அருணாசலம்; தேவநேசன், சேரமான், அகஸ்டியன், [illegible]சாமி, கிருஷ்ணன், எம். ஆர் ராமன், வரதராஜன், பாலு. ரத்தினகுமார், கிருஷ்ணமூர்த்தி, ராமச்சந்திரன், உ. சண்முகம், ஆர். டி. குணசேகரன், தாமோதரன், தங்கம், ஜெயராஜ், சடகோபன், ரத்தின [illegible] ஆகியோர்	20—0—0
தோழர் எஸ். பி. ஆசைத்தம்பி மூலம்:- திருநெல்வேலி நாடகம் மூலம்	21—0—0
சங்கரப்பிள்ளையம் பொதுக்கூட்ட வசூல்	5—0—0
சின்னசங்கரபுரம் எ. எ ஜோதி	1—0—0
,, பி. முத்து	1—0—0
,, இரா. ரஜாக்	1—0—0
சேந்தமங்கலம் அன்பர்	1—0—0
திருச்சி—தெப்பக்குளம் ஆர். நாகசுந்தரம்	2—0—0
தோழர் கே. ஏ. மதியழகன் அவர்கள் மூலம்:—	
உடுமலைப்பேட்டை பொ. பாலதண்டாயுதம்	2—0—0
,, [illegible]சாமி	1—1—0
,, [illegible]	1—1—0
,, ச. [illegible]	2—0—0
,, க. [illegible]	1—0—0
சென்னை மெமோரியல் மண்டபத்தில், 23—12—53-ந் தேதி தாய்மார்கள் சார்பில் கூட்டப்பட்ட அண்ணா முதலியோர் வரவேற்புக் கூட்டத்தில் அளித்த நன்கொடை தோழியர் சத்தியவாணிமுத்து மூலம்	901—0—0
ஷை நிதியில் அதிகப்படியாக கொடுத்தது.	1—2—1
சென்னை புரசை மன்றத்தார், பேராசிரியர் க. அன்பழகன் மூலம்	41—0—0
மலேயா—பசார் கருதி கு ரா. சாமி	5—0—0
,, ஜித்ரா சுப. சவுந்திரபாண்டியன்	6—12—0
,, ,, க. கல்யாணசுந்தரம்	6—12—0
,, ,, செ. சின்னசாமி	6—12—0
,, ,, க. பாலகிருஷ்ணன்	6—12—0
,, ,, நாராயணன்	6—12—0
,, ,, ரா. காளியப்பன்	6—12—0
,, ,, நா. வீரய்யா	15—0—0
,, ,, நாகு	3—6—0
,, ,, [illegible]	3—0—0
,, ,, ஆ. [illegible]	1—8—0
,, ,, [illegible]	1—8—0
,, அலோர்ஸ்டார் நா முத்து	3—0—0
,, ,, அ. குணசேகரன்	3—0—0
,, ஜித்ரா கோ. சண்முகம்	6—12—0
,, ம வேலப்பா	4—8—0
,, சொ சாரங்கபாணி	0—11—0
தஞ்சாவூர் அ [illegible]	5—0—0
ஆக மொத்தம் ரூ.	10,228—9—7

மதிப்புண்டு—ஆனால் எதிர்ப்பும் உண்டு!

கல்கத்தா, டிச. 28—இந்தியாவில், சட்டம்-அமைதி ஆகியவை, இதுவரை இருந்ததை விட இப்போது எவ்வளவோ அபிவிருத்தியடைந்துள்ளது; சட்டத்திற்கு மக்கள் மதிப்பு வைக்கிறார்கள் என்றாலும், [illegible] ஆண்டு காலமாக [illegible] எதிர்த்து வந்த வழக்கம், இன்னும் சிலரைவிட்டு அகல மறுக்கிறது; இந்திய பினல்கோட் நூறு ஆண்டுகளுக்கு முன்பு தொகுக்கப்பட்டதாகும்; அதை, திருத்தியமைக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது,' என்று இந்திய சர்க்கார் உள்நாட்டு மந்திரி [illegible].

பழங்குடி மக்கள் முன்னேற்றம்

ஆச்சாரியாரின் அபத்தப் பேச்சு; உண்மையென்ன?

—[o]—

தமிழ நாடு தாழ்த்தப்பட்டோர் பெடரேஷன் கூட்டுச் செயலாளர் ஆர். ஜார்ஜ் விளக்கம்

"'அரிஜன அபிவிருத்தி'க்கென்று, சென்னை காங்கிரஸ் ஆட்சியாளர்கள் அரசாங்க வரவு—செலவுத் திட்டத்தில் ஒதுக்கியுள்ள தொகை போதாது என்று, தோழர் ஆ. இரத்தினம், எம். எல். ஏ. அவர்கள் கொண்டு வந்த வெட்டுப் பிரேரபனை மீது விவாதம் நடைபெற்றது எதிர்க் கட்சி உறுப்பினர்கள் மட்டுமல்ல; காங்கிரஸ் முகாமிலிருக்கும் பல அரிஜனப்பிரதிநிதிகளும் குறைகளை விளக்கிப் பேசினர்.

இதற்கு இறுதியாகப் பதிலளிக்கும் வகையில் முதலமைச்சர் இராசகோபாலாச்சாரியார் பேசினர். அவர் பேசும்போது குறிப்பிட்டதில், 'பெரும் சாதனை' என்று மக்களும், சட்டசபை உறுப்பினர்களில் சிலரும் நினைப்பார்கள் என்ற கர்வத்தில் "......பிரிட்டிஷார் ஏற்படுத்திய அரசியல் திட்டப்படி, இந்தச் சபையில் உறுப்பினர்களாக இருக்க வேண்டிய அரிஜன அங்கத்தினர்கள் 76; (இக்கோரத்தில் சட்டசபை சபாநாயகர் 18 அங்கத்தினர்கள் என்று குறிப்பிட்டார்) ஆனால், இந்தச் சபையில் இன்று பார்க்குமிடமெங்கும் அரிஜன அங்கத்தினர்கள் காணுமளவு 42 அங்கத்தினர்களுக்கு மேல் உள்ளனர். இது காரணம், சபாநாயகர் ஜே. சிவசண்முகம் பிள்ளையும் சேர்ந்து செய்ததாகும்—கூட்டுத் தொகுதியாய் ஏற்பட்டதாகும்," என்றார்.

இந்தப் பதிலைக் கூறிவிட்ட சாலேயே, அவர், பிரச்சினையைத் தீர்த்துக் கட்டிவிட்டதாக நினைத்துவிட்டார் போலும்!

ஆனால், உண்மையென்ன? கனம் ஆச்சாரியார் கூறியது சரியா?—என்று பார்த்தால், 'உண்மையை வெறும் வார்த்தைகளைக் கொண்டே மறைத்து விடலாம்,'' என்று ஆச்சாரியார் கனவு கண்டிருக்கிறார். ஆச்சாரியார் கூறிய "கூட்டுத் தொகுதி" ஏற்படுமுன் லண்டனில் ராம்சே மெக்டொனால்டு தலைமையின் கீழ் நடைபெற்ற வட்ட மேசை மாநாட்டில், தாழ்த்தப்பட்டோரின் தனிப்பெரும் தலைவர் டாக்டர் அம்பேத்கார் அவர்களின் அறிவுத் திறனால், ஆணித்தரமான பேச்சால் தாழ்த்தப்பட்டமக்கள், தங்களின் பிரதிநிதிகளைத் தாங்களே நேரடியாகத் தேர்ந்தெடுத்துக் கொள்ளும் தனித்தொகுதி முறையைப் பெற்றனர்; ஆனால், அதைக் காந்தியடிகள் [illegible] தத்தை எதிர்த்து [illegible] சிறையில் உண்ணாவிரதம் பூண்டார். காந்தியடிகள் மரணமடையும் தருவாயில் டாக்டர் அம்பேத்கார் அவர்களும், மற்றும் தாழ்த்தப்பட்ட இன தலைவர்களும், கூட்டுத் தொகுதி முறைக்கு ஒப்புக்கொண்டு ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டனர்—தங்களின் உரிமையைத் தியாகம் செய்து, காந்தியடிகளுக்கு உயிர்ப்பிச்சை அளித்தும் வண்ணம்!

இது பழைய கதைதான்; ஆனால், இன்று எடுத்துக் காட்ட வேண்டிய குழலையை உண்டாக்கிவிட்டார் கனம் ஆச்சாரியார்!

ஆம்; 'பூனா ஒப்பந்தம்' என்ற அப்பெயர் கொண்ட அவ்வொப்பந்தத்தில் கையெழுத்திடாமை வந்து விட்டவர்களில் மிக் குறிப்பிடத் தக்கவர், கனம் ஆச்சாரியார் தன்னோடு சேர்த்த பேரை, சட்டசபை சபாநாயகர் கனம் ஜே. சிவசண்முகம் பிள்ளை என்பதைக் குறிப்பிடுகிறேன்.

'கூட்டுத் தொகுதி' என்பது, பார்ப்பனர்களும், ஆதிக்க வைதீக மேலதிகாரர்களும் தங்களுக்குத் தேவையான 'கைக்கூலி ஆட்களை' ஏற்படுத்திக் கொள்வதற்கு வழி வகுப்பதாகும்.

'தனித் தொகுதி' என்பது, தாழ்த்தப்பட்டோரே நேரடியாகத் தங்களின் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கப் பாதை வகுப்பதாகும். இம்முறையில் அங்கத்தினர்களாக வருபவர்களின் தொகை, கனம் ஆச்சாரியார் கூறுவது போல பதினெட்டோ, இருபத்தாறோ அல்ல; ஜனத்தொகை விகிதாசாரப்படி அதிகப்படியான ஸ்தானங்களாகும்; ஆகவேதான், தனித் தொகுதி தான் தாழ்த்தப்பட்டோருக்குச் சிறந்தது என்று இன்றுவரை தாழ்த்தப்பட்டோர் சம்மேளனம் கூறிவருகிறது.

இந்நிலையில் கனம் ஆச்சாரியார், மக்களை வேறு திசையிலே திருப்பும் வண்ணம்—வார்த்தை அலங்காரங்களோடு பேசினது கண்டு தாழ்த்தப்பட்ட மக்களின் சார்பாக என் கண்டனத்தையும், வருத்தத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்."

நீர் தேக்கி மின்சார உற்பத்தி

மத்தியமின் குழுவின் அறிக்கை

வடநாட்டு திட்டங்களுக்கே முதலிடம்!

புதுடெல்லி, டிச. 26—இந்தியத் துணைக் கண்டத்தில் உள்ள, நீர்தேக்கி மின்சார உற்பத்திச் சாதனங்கள் அனைத்தையும் கண்டறிந்து உருவாக்க, மத்திய நீர்-மின்சார குழு ஆலோசனை முடிவெடுத்திருக்கிறது.

இந்தக் கண்டறியும் ஏற்பாட்டின் முடிவுகள், இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தில் இடம் பெறும் என்று சொல்லப்படுகிறது.

இந்த ஏற்பாட்டில், முதல் முதலாக முதலிடம் தரப்பட்டிருக்கும் பகுதி வடநாடுதான்.

மேற்கு மலைத் தொடர்ச்சியிலிருந்து தொடங்கும் நதிகளின் நீரைத் தேக்கி மின்சாரம் எடுப்பதற்காக உருவாக்கப்பட்டிருக்கும் திட்டங்களைக் கருதிய, பம்பாய், மைசூர், சென்னை, ஆந்திரம், திருவாங்கூர்—கொச்சி, ஐதராபாத் ஆகிய சர்க்கார்களுக்கு அனுப்பப்பட்டு இருக்கிறதாம்.

காலம் வந்ததும், இது போன்றே கண்டறியும் ஏற்பாடு தென்னாட்டிலும் நடைமுறைக்குக் கொண்டுவரப்படும் என்று அறிவிக்கப்படுகிறது.

மாவ் மாவ் ஜெனரல் கொல்லப்பட்டார்

நைரோபி, டிச. 25—மாவ் மாவ் ஜெனரல் மடன் ஜ. சோசன்டனை, 5 ஐரோப்பியர் காவல் படையினரே கொன்று விட்டனர்.

கென்யா போலீசார் இந்த வாரத்தில் காவலர்களைப் பலப்படுத்தியிருக்கின்றனர்.

கைத்தறி துணி உடுத்தும் நன்னாள்!

பெத்துநாய்க்கன்பேட்டையில் தலைவர்களுக்குப் பாராட்டு

ஆயிரமாயிரவர் கலந்து கொண்ட மாபெரும் கூட்டம்

தி. மு. கழகம், திருவள்ளுவர் முன்னணிக் கழகம் கூட்டு முயற்சி வெற்றி

சென்னை, டிச. 28—

சென்னை, பெத்துநாய்க்கன்பேட்டை 8-வது வட்ட திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில், 26—12—53 சனி அன்று மாலை, சிறை சென்று மீண்ட தி. மு. கழகத் தலைவர்கள், தோழர்கள் அண்ணாதுரை, நெடுஞ்செழியன், மதியழகன், நடராசன் ஆகியோருக்கு ஓர் வரவேற்புப் பாராட்டுக் கூட்டம் மிகச் சிறப்பான முறையில் நடைபெற்றது.

கூட்டத்திற்குத் தோழர் சி. ஆர். பாலசுந்தரம் அவர்கள் தலைமை வகித்தார்.

தோழர் நாகூர் அனீபா அவர்கள் நாட்டுப் பண் பாடினார்.

பல தி. மு. கழகக் கிளைகளின் சார்பிலும், பெத்துநாய்க்கன்பேட்டை தி.மு.கழக 8-வது வட்டம், திருவள்ளுவர் முன்னணிக் கழகம் ஆகியவற்றின் சார்பிலும், வாழ்த்துக்கள், மலர்மாலைகள், கைத்தறித் துணிகள், தலைவர்களுக்கு அளிக்கப்பட்டன.

காஞ்சீபுரம், தோழர் சி. வி. ராசகோபால் (நகராட்சி மன்ற உறுப்பினர்) அவர்கள் பேசும் போது குறிப்பிட்டதாவது:—

"ஆச்சாரியார் அவர்கள் நமக்கு ஏதோ பெருந்தொல்லை தருவதாக தோழர்கள் கூறுகின்றனர். நான் அதை மறுக்கிறேன். ஆச்சாரியார், ஆட்சிக்கு வந்திராவிட்டால், 'ஜூலை 15' நடந்திருக்காது; திராவிட முன்னேற்றக் கழகம் இந்த அளவுக்குத் தியாகத் தழும்புகளை ஏற்று, ஒரு பெரும் அரசியல் கட்சியாக உருவெடுத்து இருக்காது. அவர் தொல்லை தரத்தர, நாம் மேலும் வளர்ந்து கொண்டே போகிறோம்; எனவே, 'மறைமுகமாக' நம் வளர்ச்சிக்குப் பாடுபடும் ஆச்சாரியார், நீடூழி காலம் வாழ்க என வாழ்த்துகிறேன்," என்றார்.

மேலும் அவர் பேசியதாவது:—

"ஆட்சி உரிமையையும், பணத்தையும் நாம் வடநாட்டிடம் அடகு வைத்துவிட்டுக் கிடக்கிறோம்; இது மிகமிகக் கேவலமானது; அதுமட்டுமல்ல; அண்மையில் நிதி மந்திரி கனம் சுப்ரமணியம் அவர்கள், இங்கிருந்து 50 மைலுக்கு அப்பாலுள்ள எங்களுருக்கு ஓடோடி வந்தார். வந்து அவர் செய்தது என்ன தெரியுமா? — வெட்கப்படுவீர்கள் தோழர்களே — 'இந்துஸ்தானிக் கழகம்' திறந்து வைத்தார்!

"நாம் வரி செலுத்துகிறோம் — நமது பணம்தான் — அவருடைய மோட்டாருக்கும், செலவுக்கும்! என்றாலும், தமிழ்நாட்டிலே பிறந்த ஒரு தமிழர் — மந்திரி சுப்ரமணியத்தால் ஒரு தமிழ்க் கழகம் திறக்க முடியவில்லை!! எவ்வளவு வேதனை தரக்கூடியது இது? இவைகளெல்லாம் மாறி, இனியத் திராவிடம் பெற நீங்கள் அனைவரும் பாடுபட வேண்டும்," என்றார்.

'நமக்குப் பகை பார்ப்பனீயம்தான்'

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

'100 ரூபாய் காணவில்லை' என்றாராம் அவர்; சரி, சரி, வா, ஸ்டேஷன் மாஸ்டரிடம் போய்ச் சொல்லுவோம். என்று திருடிய பார்ப்பன வக்கிலே கூடத் தாளம் போட்டாராம்!"

"பின்னர் ஒருநாள், பார்ப்பன வக்கீலின் மனைவி, தன்னுடைய வீட்டு வண்ணானிடம், அவசர அவசரமாகத் துணிகளைப் போட்டாள்; பின் வண்ணான், தன்வீடு சென்று துணிகளைச் சோதித்தான்; ஒரு கோட்டிலே இருந்து ஒரு 10 ரூபாய் நோட்டு விழ, அதை அவன் எடுத்தான் — அந்தப் பத்து ரூபாய், அவனுடைய அன்றைய வசதிக்குப் போதுமானது — அய்யர் வீட்டுத் துணியை 2, 3 மாதங்களுக்கு வெளுத்தாலகூட அந்தத் தொகையை அவன் காண முடியாது — என்றாலும், அந்தப் பத்து ரூபாய் நோட்டை எடுத்தவுடன், 'இது அய்யர் வீட்டுப் பணம்!' என்று சொல்லிக் கொண்டே, வக்கில் வீட்டுக்கு ஓடிவந்தான்; அய்யர் ஈசி சேரிலே சாய்ந்திருந்தார் — 'என்னடா?' என்று கேட்டார் — வண்ணான் சின்னான், கோட்டைப் பட்டி நடந்ததைச் சொன்னான்! அய்யருக்கு அவமானமாகிவிட்டது.

"படிக்காத வண்ணாரச் சின்னான், இவ்வளவு பெருந்தன்மையுடன் நடக்கிறான்; படித்து, வக்கீல் பட்டம் பெற்ற அவர், அன்று இரயிலிலே திருடியது — அவருக்கே அவமானமாகிவிட்டதாம்!

"இந்தக் கதையை, நமது இதழ்களான — 'திராவிட'னோ 'மன்ற'மோ தரவில்லை, தோழர்களே! நம்முடையது அல்ல இது; சென்ற ஆண்டு 'கல்கி' மலரிலே, கனம் ஆச்சாரியாரே, 'வண்ணாரச் சின்னான்' என்ற தலைப்பிலே எழுதியிருக்கிறார்!!

"ஆச்சாரியார், ஆரியரின் அழுக்கு மனப்பான்மையையும், திராவிட இனத்தைச் சேர்ந்த வண்ணாரச் சின்னானின் மாசு மறுவற்ற உள்ளத்தையும் படம் பிடித்துக் காட்டியதற்கு, நான் அவருக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். இதை நாம் எழுதியிருந்தால், என்னென்ன பேசியிருப்பார்கள்?

"திராவிட நாட்டை எப்படியும் நாம் அடையத்தான் போகிறோம், பழிச்சொற்களாலும், பணத்தாலும், நெருக்கலாலும், நிக்கனாலும் அதைத் தடுக்க முடியாது.

சென்னையில் திராவிடர் திருநாள்

சென்னையில் 14-1-54ல் நடக்க இருக்கும் 'திராவிடர் திருநாளில்,' கலைப் பகுதியின் சார்பில், சிறுவர் சிறுமிகளுக்கு நடைபெறும் பேச்சுப் போட்டியில் கலந்துகொள்ள விரும்பும் சிறுவர், சிறுமியர் 12 வயதிற்குட்பட்டவர்களாக இருத்தல் வேண்டும். பேச்சின் தலைப்பு 'பொங்கல் விழா' என்பதாகும். 3 நிமிட நேரமே பேச்சிற்குத் தரப்படும். இப்போட்டியில் கலந்துகொள்ள விரும்புவோர், ஜனவரி 10-ந் தேதிக்குள் கீழ்க்கண்ட முகவரிக்கு விண்ணப்பித்துக்கொள்ளவும்.

கே. எம். கண்ணபிரான், செயலாளர் தி. மு. கழகம், சென்னை மாவட்டம், 'அறிவகம்,' இராயபுரம், சென்னை-13.

நாடார் பெருமக்கள் 23-வது மாநாடு

சென்னை, டிச. 28—

நேற்று காலை 9 மணிக்கு, சென்னை பச்சையப்பன் திடலில், பாண்டியன் பந்தலில், நாடார் மகாஜன 23-வது மாநாடு நடைபெற்றது.

மாநாடு துவங்குவதற்கு முன், யானையும், குதிரைகளும் முன்னே வர, நாடார் பெருமக்கள், வாத்திய முழக்கத்துடன் ஊர்வலமாக மாநாட்டுப் பந்தலை வந்தடைந்தனர்.

வரவேற்புக் குழுத் தலைவர் தோழர் பி. ராமசாமி அனைவரை வரவேற்றுப் பேசினார்.

கொடைக்கானல் எஸ். ஜி. ஜெயராஜ் மாநாட்டைத் திறந்து வைத்தார்.

மாநாட்டுத் தலைவர் நாகர்கோயில் தோழர் ஜான்ஹில் ஐயா நீண்ட நேரம் தலைமை உரையாற்றினார். அதில் அவர் குறிப்பிட்டதாவது:—

"பெண்கள் அதிகம் நகை அணிவது ஆபத்தைத் தரக்கூடியது. நாடார் குலப் பெண்கள் அளவுக்கு மீறிய நகைகளை அணியக்கூடாது.

"சென்னையிலுள்ள மலையாளப் பகுதிகளை, திருவிதாங்கூர் — கொச்சியுடனும், அங்குள்ள தமிழ்ப் பகுதிகளையும், ஆந்திராவிலுள்ள தமிழ்ப் பகுதிகளையும் இணைத்து, விரைவில் தமிழ் மாநிலம் அமைக்க வேண்டும்," என்று வற்புறுத்தினார்.

அதன்பின், தோழர் வி. வி. ராமசாமி அவர்கள், பட்டிவீரன்பட்டி உ. பு. அ. சவுந்தர பாண்டியனாரின் உருவப் படத்தைத் திறந்து வைத்து, அவரின் சிறப்பை விளக்கினார்.

பகல் உணவுக்குப்பின், பெண்கள் மாநாடு தோழியர் ராஜம்மாள் வாலசுப்ரமணியம் தலைமையில் நடைபெற்றது.

தோழியர் ஜே. ஜேசுதாசன் அனைவரையும் வரவேற்றுப் பேசினார்.

தோழியர் சுசிலா சந்தோஷம் மாநாட்டைத் திறந்துவைத்தார்.

மாநாட்டின் முடிவில், கைத்தறித் துணியை உடுக்கக் கோரியும், நாடார் குல மக்களுக்கு சென்னையில் ஒரு கல்லூரி கட்டக் கோரி (தோழர் பி. ராமசாமி அவர்கள் ரூ 51 ஆயிரம் நன்கொடை தருவதாக அறிவித்துள்ளார்)யும், பலசரக்கு விற்பனை வரியை எதிர்த்தும், கலப்பு மணத்தை ஆதரித்தும், வாரதட்சிணை வாங்குவதைக் கண்டித்தும், [illegible] பின் [illegible] சோகக் [illegible] தீர்மானங்கள் நிறைவேறின.

இரவு 9 மணிக்கு பவளக்கொடி நாடகம் நடைபெற்றது. [illegible] பாகவதர், [illegible] லட்சுமி ஆகியோர் முக்கிய பாகம் தாங்கி நடித்தனர்.

நாட்டுக்காகத்தான் கவர்னர் ....

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

தான் கவர்னரே தவிர, கவர்னருக்காக மக்கள் அல்ல,' என்றேன்,"—இவ்வாறு தி. மு. கழகப் பொருளாளர் தோழர் ஏ. கோவிந்தசாமி, எம்.எல்.ஏ., அவர்கள், தலைவர்கள் வரவேற்புக் கூட்டத்தில் சிறப்புரை ஆற்றுகையில் குறிப்பிட்டார்.

"ஆச்சாரியார் தன் கல்வித் திட்டத்தை வாபஸ் வாங்கித் தீரவேண்டிய கட்டாயத்தில் வந்துள்ளார்! காரணம், நாம், பார்ப்பனரைப் பார்த்து உங்களின் குலத்தொழிலான பஞ்சாங்கத்தையும், தர்ப்பையையும் எடுங்கள் என்று பேசப் பேச திட்டத்தை மாற்றி விடுகிற கட்டத்துக்கு வந்துவிட்டார். கல்வித் திட்டம் வாபஸ் வாங்கியாகிவிட்டதென்றே கூறுவேன். வர்ணாசிரமக் கல்வித் திட்டம் என்பது போய், இப்போது சட்டசபையிலே கூறுகிறார் — என்னுடைய கல்வித் திட்டம் 'குழந்தைகளின் கல்வியைப் பெருக்குவதற்கே!' என்று.

"இன்று சட்டசபையிலே கல்வி மந்திரியார் கூறினார் — 'இராமநாதபுரம் ஜில்லா...... ஆகிய ஜில்லாக்களில் 45 சதவிகிதம் இத்திட்டம் வெற்றி பெற்றுவிட்டது; மேலும் ஆதரவு பெருகி வருகிறது' என்று! உடனே நான், 'இந்த இரு ஜில்லாக்களில் மட்டும் தான் வெற்றி பெற்றதென்றால், மற்ற ஜில்லாக்களில் இத்திட்டத்திற்கு ஆதரவில்லை — தோல்வியுற்றது என்பதை ஒப்புக்கொள்கிறீரா?' என்றபோது, ஆச்சாரியார் வெட்கித் தலை குனிந்தார். எனவே, நாம் புதிய கல்வித் திட்ட எதிர்ப்பில் வெற்றி பெற்றுவிட்டோம் என்றே கூறுகிறேன்.

"'குறைந்த செலவில், அதிகம் பேர் படிக்கத்தான், இத்திட்டம்,' என்றார் ஆச்சாரியார்; 'பருலேகர் கமிட்டி, அதிகச் செலவில், குறைந்த படிப்பான சிபாரிசைத்தானே செய்திருக்கிறது,' என்று கேட்டேன். பதிலில்லை. எனவே, நமது போராட்டம் வீண்போகவில்லை. அதுமட்டுமல்ல — ஆச்சாரியார் பற்றி அண்மையில் டில்லிக்கு நேருவிடம் அறிவுரை கூறச் சென்ற மூவர் குழுவினரில் ஒருவரான தோழர் டி. ஜி. கிருஷ்ணமூர்த்தி, நம்முடைய போராட்டங்களை நேருவுக்கு நன்கு விளக்கியிருக்கிறார். 'ஆச்சாரியார் ஆட்சி ஒழிந்தால்தான், நாங்கள் இனி தலைகாட்ட முடியும்,' என்றும் அவர்கள் கூறியிருக்கிறார்கள்!

"சட்டசபையிலே ஆச்சாரியார் சொன்னார் — 'டால்மியாபுரம் என்று பெயரிட்டதும் தவறு; இப்போது, அதை மாற்றவேண்டும் என்று கூறுவதும் தவறு,' என்று. 'கல்லக்குடி'க்கு 'டால்மியாபுரம்' என்று பெயரிட்டது தவறு என்று தன் குற்றத்தை ஒப்புக்கொண்டபின், மக்கள் ஊருக்கு மதிப்பளித்து அதை ஏன் அவர் மாற்றக்கூடாது?

"அடுத்த சட்டசபை கூடும் போது ஆச்சாரியார் இருப்பாரோ இருக்கமாட்டாரோ! போகும் போது அவர், தன்னுடைய கல்வித் திட்டத்தையும் சட்டபூர்வமாக வாபஸ் வாங்கிக் கொண்டு போகும்படி கேட்டுக் கொள்கிறேன்!"

திராவிட நாடு சார்பில் ஒருவர்...

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

தேரம்-இதே இடத்திலே, இன்று இங்கு வீற்றிருக்கும் டாக்டர் தர்மாம்பாள் அம்மையார் தலைமையிலே படை புறப்பட்டது. அருமைத் தோழர்கள் தாளமுத்து — நடராசனை அவருக்குப் பலியிட்டோம். பிறகே அவர் இந்தியை நீக்கினார்."

"கல்வித் திட்ட விஷயத்தில் தெளிவு பிறக்க ஆச்சாரியாருக்கு, 3, 4 மாதங்கள் பிடித்திருக்கிறது. நமக்கு ஏற்பட்டுள்ள ஆதரவைப் பார்த்து, தி. மு. கழகத்தின் உறுதியை அளந்து, தன் மூக்கறுபட்ட பின்பே, அவருக்குத் தெளிவு பிறப்பதற்காக உண்மையிலே வருந்துகிறோம்.

"'கல்கி,' ஆரிய — திராவிட இரத்தப் பரீட்சையிலே இறங்கியிருக்கிறது. ஆரியர் யார்? திராவிடர் யார்?-என்று சொல்லி விடுவதாலோ, எழுதிவிடுவதாலோ, பிரச்சினை தீர்ந்து விடாது. அதைவிட, ஆரியரும்—திராவிடரும் ஒன்றுபட என்னென்ன வழிகள், பார்ப்பனீயத்திலே உள்ள குறைகளை நீக்க ஏற்ற வழிகள் என்பதனை விளக்குங்கள்.

"எனவே, எதிர் காலத்திலே நம்பிக்கை வைத்திருக்கிற என் அருமை காங்கிரஸ் நண்பர்களையும், பார்ப்பனத் தோழர்களையும் நான் வேண்டுவதெல்லாம், 'எதிர்காலம் எப்படி என்பதைப் பற்றிச் சிந்தியுங்கள்.

"சென்ற வாரம் கூடிய தமிழ் ஆட்சி மொழி மாநாடு நமக்கொரு அரிய பாடத்தினை தந்திருக்கிறது. பல கட்சித் தோழர்களும், கட்சியே இல்லாதவர்களும் கூடி, எப்படி ஒரு நல்ல நிலைக்கு நியாயத்திற்காக உறுதி எடுத்தனரோ, அப்படி நம் இனப்பற்று திராவிடம் அமைய நீங்கள் எல்லோரும் ஒன்று சேருங்கள்.

"பொறுமை பொச்சரிப்பால் சில குன்றர்கள், நமது அருமைத் துடிதுடிக்கும் தோழர்களை மாசு படுத்தவே புகுந்து கிராமசம்பந்தத்தை நிறுத்தியிருக்கிறார்கள்; அந்த நடு வழக்கு வெற்றி பெற அனைவரும் ஒன்று சேருங்கள்."

துணிகரக் கடற்கொள்ளை

பணயத்தொகை பெற்று படகுகள் விடுதலை

கோலாலம்பூர், டிச. 26—

100 மீன் பிடிக்கும் படகுகளை மடக்கி வைத்துக்கொண்டு பணயத்தொகை பெறப்பட்டதோடு 8 மோட்டார் படகுகளும் கவர்ந்து செல்லப்பட்டன. கடல் கொள்ளைக்காரர்களால். இந்தக் கொள்ளை இந்த வாரத்தில் மலாக்கா ஜலசந்தியில் நடைபெற்றது.

கொள்ளைக் கூட்டத்தினர் ரூ. 2 ஆயிரம் பணத் தொகையாகக் கேட்டனர். இதற்கென விடுவிக்கப்பட்ட இருவர் சிறுத்துமன் தினத்தன்று குறிப்பிட்ட கட்டணத்தைக் கட்டிவிட்டு மற்றவர்களை மீட்டுச் சென்றனர்.

தேன்சிங்கிற்கு நில நன்கொடை!

புது டில்லி, டிச. 28—

தேன்சிங் நார்கி, எவரெஸ்ட் மலை ஏறியதற்காகத் தங்களுடைய மகிழ்ச்சியைக் காட்டிக்கொள்ள, இந்திய இமாலய சங்கத்தினர், டெல்லியில் ஒரு சில நிலத்தை தேன்சிங்கிற்கு அன்பளிப்பாகக் கொடுத்துள்ளனர்.

தேன்சிங், டெல்லியில் பிரதமர் நேருவின் விருந்தினராக இருந்து வருகிறார்.

சென்னை [illegible] முன்னேற்றக் கழகத் [illegible] இரா. செழி[illegible] [illegible] அவர்க [illegible] அச்சகத்தில் [illegible] (க், [illegible] [illegible] [illegible] அண்ணாத்துரை [illegible]